**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.**

Case No. S.C. No. 207/2021
Prosecution side witness for P.W.14

| | | | |
|---|---|---|---|
| Name | **திரு.சிவகுமார்** | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **16.03.2026**

A2 are present. A1 absent, U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது ராமநாதபுரம் மாவட்டம், சிக்கல் காவல்நிலையத்தில் வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 24.07. 2021 ஆம் தேதி நான் தூத்துக்குடி மாவட்டம், தட்டார்மடம் காவல்நிலைய காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது சாத்தான்குளம் காவல்நிலைய பொறுப்பு ஆய்வாளராக கூடுதல் பொறுப்பை கவனித்து வந்தேன். 02.03.2021 ஆம் தேதி கீழஅம்பலச்சேரியை சேர்ந்த சின்னப்பா என்பவர் கொடுத்த புகாரின் பேரில் சாத்தான்குளம்காவல்நிலைய குற்ற எண். 50/2021 பிரிவுகள் 294 பி, 302, 506(2) இதசவின்படி முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டும், ஆய்வாளர் பெர்னாட் சேவியர் அவர்களால் முதல்விசாரணை செய்யப்பட்ட வழக்கை நான் மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். 24.07.2021 ஆம் தேதி எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் காவலர்கள் சகிதம் பன்னம்பாறை பஸ்ஸ்டாப்பில் பகல் 13.00 மணிக்கு

சென்றும், இவ்வழக்கின் 2 வது எதிரி சுடலைகண்ணன் என்ற கண்ணன் என்பவரை காரணம் கூறி கைது செய்தும், மேற்படி சுடலைகண்ணன் எவ்வித அச்சுறுத்தலோ, துன்புறுத்தலோ ஆசைவார்த்தைகளோயின்றி தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் இசக்கிதுரை, வெற்றிசிங், ஆகியோர்கள் முன்னிலையில் 13.15 மணிக்கு ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கணேசன் என்பவரை கொலை செய்த விவரத்தை சொல்லிவிட்டு அவரை கொலை செய்வதற்கு பயன்படுத்திய வெட்டருவாளை தன்னுடைய வீட்டிற்கு பின்புறம் மண்ணிற்குள் புதைத்து மறைத்து வைத்திருப்பதாகவும், தன்னை அழைத்து சென்றால் மேற்படி சம்பவத்திற்கு பயன்படுத்திய வெட்டருவாளை அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்வதாக சொல்லி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதன் அடிப்படையில் 14.45 மணிக்கு இவ்வழக்கின் சுடலைகண்ணு என்பவரின் கீழஅம்பலசேரியில் உள்ள வீட்டிற்கு பின்புறம் சாட்சிகள் மற்றும் எதிரியுடன் சென்று அங்கு எதிரி அடையாளம் காட்டி தோண்டி எடுத்து ஆஜர் செய்த சுமார் 14 செ.மீ கைப்பிடியும், சுமார் 34 செ.மீ இரும்பு பாகமும், மொத்தம் 48 செ.மீ நீளமுள்ள வெட்டருவாளை சாட்சிகள் இசக்கிதுரை, வெற்றிசிங் ஆகியோர்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். அதற்கான அத்தாட்சி நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ–7 தான். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ–8 தான். எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் 15.45 மணிக்கு சாத்தான்குளம் காவல்நிலையம் வந்து எதிரியை திரேக பரிசோதனை செய்து, காவல்நிலைய பாராவில் வைத்தேன். கைது செய்த விவரத்தை உறவினர்களுக்கு தகவல் தெரிவித்தேன்.

காவல்நிலையத்தில் வைத்து சாட்சிகள் இசக்கிதுரை, வெற்றிசிங் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கைப்பற்றப்பட்ட தடய சொத்தான அரிவாளை படிவம் 91 மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். அதற்கான படிவம் 91 நீதிமன்றத்தில் காட்டப்படுவது அது **அ.சா.ஆ–18** ஆகும். அந்த அரிவாள் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் அ.சா.பொ.4 தான்.

பின்னர் சாத்தான்குளம் காவல்நிலையத்திற்கு ஆய்வாளர் பணிக்கு திரும்பிவிட்டபடியினால் மேற்படி வழக்கு கோப்பினை சாத்தான்குளம் காவல்நிலைய ஆய்வாளர் அவர்களிடம் தொடர் புலன்விசாரணைக்காக ஒப்படைத்தேன்.

(எதிரிகள்தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பு அளித்தபோது குறுக்குவிசாரணை இல்லை என சொன்னதன் அடிப்படையில் குறுக்குவிசாரணை இல்லை என முடிக்கப்பட்டது)